## துணைவேந்தர்கள் மாநாட்டில் தொழில் முதலீடுகளைப் பற்றிப் பேசுகிறார்!

# தமிழ்நாட்டில் அரசியல் சேட்டைகள் செய்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி!

## ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி – ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் – மூத்த பத்திரிகையாளர் எஸ்.பி.லட்சுமணன் கண்டனம்!

**சென்னை, ஜூன், 11**

**‘நியூஸ் 18’ தொலைக்காட்சியில் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் “ பொறுத்தது போதும், பொங்கி எழுவோம், முதலமைச்சரின் சூளுரை யாருக்கான எச்சரிக்கை? ” என்ற தலைப்பில் கார்த்திகைச் செல்வனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் எஸ்.பி.லட்சுமணன் வாதிட்டு பேசியதாவது:**

அரசியல் ரீதியாக நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், தி.மு.கழகத் தலைவர் ஸ்டாலின் ‘பொறுத்தது போதும், பொங்கி எழுவோம்’ என்று சொல்லிவிட்டுப் போய் இருந்தால் அதனை ஒரு வரியில் கடந்து போய்இருக்கலாம், அவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகவும் இருந்து கொண்டு அந்த வார்த்தையை பயன்படுத்தியதினால் தான் இன்றைக்கு அது விவாதப் பொருளாக மாறி இருக்கிறது.

நேற்றைய கூட்டத்தில் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியதற்கு முன்பு மூன்று குறிப்புகளைச் சொல்கிறார். சாதி மத ரீதியாக மக்களைப் பிளவு படுத்தி பி.ஜே.பி. வெற்றி கொள்ள நினைக்கும், வெல்லப் பார்க்கும், எதிர்க்கட்சிகளிடையே இருக்கின்ற சிறு சிறு முரண்பாடுகளை பயன்படுத்தி அதை பெரிது படுத்தி, வெற்றி பெற முயற்சிக்கும். இதற்கு இடம் கொடுக்காமல், எதிர்க்கட்சிக்களைச் சேர்ந்த அகில இந்தியத் தலைவர்கள்,மாநிலத் தலைவர்கள், முதலமைச்சர்கள் இதற்கு இடம் கொடுக்காதீர்கள், அதற்கு இரையாகி விடாதீர்கள், என்று சொல்லிட்டு, அவதூறுகளைப் பரப்புவதற்கு இங்கே ஒரு கூட்டம் இருக்கிறது. அப்படி என்கிற வார்த்தைக்கு அடுத்துதான், ஆளுநரைச் சொல்கிறார்.

இங்கே ஆளுநரும் இருக்கிறார். அவர் இங்கே அவதூறுகளை அள்ளி வீசுகிறார் என்று சொல்லிவிட்டு “அவருடைய சித்து விளையாட்டுகளையும் நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். மக்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். நாம் அனைவரும் அதைப்பற்றியெல்லாம் கவலைப் பட வேண்டாம், மக்கள் நம்மோடு இருக்கிறார்கள்” என்று சொல்லி விட்டுத்தான் “பொறுத்தது போதும், பொங்கி எழுவோம்” என்று கூறி, அடுத்து கூட்டணியைப் பற்றி, பி.ஜே.பி.யை வீழ்த்துவது பற்றிப் பேசுகிறார்.

பி.ஜே.பி.யை வீழ்த்துவதற்காக பொறுத்தது போதும், பொங்கி எழுவோம் என்று சொல்லி இருப்பார் என்று நான் பார்க்கவில்லை. ஏன் என்றால், 2019 லேயே பொங்கி எழுந்துட்டாங்க, தங்களுடைய திறமையை; தங்களுடைய பலத்தை அப்போதே நிரூபித்து விட்டார்கள். மீண்டும் அதனை நிரூபிப்பதற்காகத்தான், அகில இந்திய அளவில் ஒரு கூட்டணியை உருவாக்க வேண்டும் என்று சொல்லி இந்த வார்த்தையை சொல்லி இருக்கிறார். இப்போது இந்த வார்த்தையை பயன்படுத்துவதற்கு முழுக்க முழுக்க காரணம் ஆளுநர் தான் என்ற பார்வையில் பார்க்கிறார்.

ஒரு முதலமைச்சர், நான், என் பார்வையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஸ்டாலின் அவர்களிடம் இல்லாத அந்த வார்த்தை வேகத்தை வைத்துப் பார்த்தால் , ஆளுநருடைய இந்த ஒரு வாரத்தில் அவர் நடத்திய அரசியல் சேட்டைகள் என் ஞாபகத்திற்கு வருகிறது. மூன்று விஷயங்கள். துணை வேந்தர்கள் மாநாட்டை ஆளுநர் கூட்டுவதற்கு அதிகாரம் இருக்கிறது, வேந்தர் அவர்தான். ஆனால், அதற்கான அஜண்டாவில் அவர் என்ன சொல்கிறார் என்றால், புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதைப் பற்றி விவாதிக்குமாறு ஒரு செய்தியை கசிய விட்டார்.

அப்போது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு என் நினைவுக்கு வருகிறது. ஆளுநர் என்பவர் அமைச்சரவையின் ஓர் அங்கம். அமைச்சரவையின் கருத்துக்கு மாறாக தனக்கென ஒரு தனிக் கருத்தை வைக்கக் கூடாது, திணிக்கக் கூடாது என்று ஓரிரு மாதங்களுக்கு முன்பாக அரசியல் சட்ட, உச்சநீதிமன்ற அமர்வு கொடுத்த தீர்ப்பு என் நினைவுக்கு வருகிறபோது; புதிய கல்விக் கொள்கை இந்த மாநில அரசு, இந்த அமைச்சரவையைக் கவனித்துக் கொள்கின்ற மாநில அரசு ஏற்கிறதா, இல்லையா? என்பதைப் பற்றி ஒரு தெளிவுக்கு வராமல். அவர்களிடம் கருத்து கேட்காமல். புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவது தொடர்பாக, துணை வேந்தர்கள் கூட்டத்தைக் கூட்டியது தவறு. சரி கூட்டுகிறீர்களே; இணை வேந்தரான என்னை கூப்பிட வேண்டாமா என்று அமைச்சர் க.பொன்முடி கேட்ட பிறகு “இல்லை, இல்லை நாங்கள் அதற்காகக் கூட்டவில்லை; தாய் மொழியில் அந்த கல்வியை அமல்படுத்துவதற்கு. பாடத்திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக விவாதிக்கப் போகிறோம்” என்று கூறினார்.

சரி, இப்போது துணை வேந்தர்கள் கூட்டத்தைக் கூட்டுகின்ற போது, அதே காலக் கட்டத்தில் ஒன்றிய அரசு சம்பந்தப்பட்டு ஒரு ஆய்வறிக்கை வெளிவந்தது. ஒரு தரப் பட்டியல் வெளிவந்தது. அந்த துணைவேந்தர்கள் கூட்டத்தில் பேசப்படவேண்டிய விஷயமாக உண்மையான விஷயம் வெளியே வரும்போது, அகில இந்திய அளவில் கல்வி நிறுவனங்களின் தரச் சான்று, தரப்பட்டியல் வெளிவந்த போது, அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகள், கலைக் கல்லூரிகளாகட்டும், பொறியியல் கல்லூரிகளாகட்டும், மருத்துவக் கல்லூரிகளாகட்டும், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் டாப் 100 இல் எதை எடுத்துக் கிட்டாலும், அதில் குறைந்தது 30 கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தது இருக்கிறதே இது நமக்குப் பெருமை என்று ஒரு வரி சொல்லத் தயங்கிய ஆளுநர் ; அரசியல் சேஷ்டையுடன் துணைவேந்தர்கள் பங்கேற்ற மாநாட்டில் தொழில் முதலீடு குறித்து பேசலாமா?

இன்னொன்று சொல்லட்டுமா, இந்த இரண்டாண்டு கால தி.மு.க. ஆட்சி மட்டும் அதற்கு காரணம் அல்ல, ஒரு ஆளுநர், திராவிட மாடல் தி.மு.க.அரசைப் பாராட்ட விரும்பாத ஆளுநர், என்ன சொல்லி இருக்கலாம்? இது எனக்குப் பெருமையான விஷயம், தமிழ்நாட்டிற்கு பெருமையான விஷயம், ஆனால் கடந்த கால ஆட்சியாளர்களுக்கும் இதில் பங்கு இருக்கிறது என்று சொல்லத் தயங்குகிற ஆளுநர், துணைவேந்தர்களுக்கு ஒரு துளியும் சம்பந்தமில்லாமல் தொழில் முதலீட்டு விஷயத்தை பேசுகிறார் என்றால், அதனால் தான் நான் சேட்டை என்கின்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன்.




நடுநிலையோடு இருக்கக் கூடிய ஆளுநர், ‘கான்சிக்யூகிசன் பற்றி இந்த வார்த்தையைப் பயன்டுத்தியதற்காக நான் வெட்கப்படுகிறேன். ஆனால் நான் திரும்பவும் பயன்படுத்துவேன் என்று ஒரு சேட்டையைச் செய்து, தொழில் முதலீட்டைப் பற்றி முதலமைச்சரை மறைமுகமாக சீண்டுவதைப் போல ஒரு கருத்தைச் சொல்கிறார். இங்கே இருக்கின்ற சூழலை உருவாக்கிக் கொண்டு வெளியே போங்கள் என்று சொல்கிறார். ஒரு ஆளுநர் ; இந்த அரசின் நிர்வாகத் தலைவராக இருக்கின்ற ஒரு ஆளுநர், முதலீட்டாளர்களுக்கு என்ன சொல்ல வருகிறார்? இனிமேல் முதலீடு செய்யப்போகின்ற முதலீட்டாளர்களுக்கு தமிழ்நாட்டில் அந்தச் சூழல் இல்லை. இது தான் இந்த மாநிலத்திற்கு எதிரான செயல், இப்படிப்பட்ட ஆளுநர் ஒரு நாள் கூட இந்த மாநிலத்தில் இருக்கக் கூடாது என்று முதலமைச்சர் நினைத்து இருக்கலாம்.

### நாகாலாந்து மக்களால் துரத்தி அடிக்கப்பட்ட ஆளுநர்!

வைகோ கடுமையாக ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார். நாகாலாந்து மக்கள் துரத்தி அடித்ததைப் போல தமிழ்நாட்டில் இருந்து துரத்தி அடிக்க வேண்டும் என்றார். முதலமைச்சர் சற்று நாகரீகமாக செய்திருக்கிறார்.

**நெறியாளர்** : ஆளுநர் தரப்பில் என்ன சொல்கிறார்கள் என்றால், ஒரு அக்கறையாக , அதை ஏன் பார்க்கக் கூடாது ?

**எஸ்.பி.இலட்சுமணன்:** அந்த அக்கறை எங்கே இருக்க வேண்டும்? நீங்கள் சோஷியல் மீடியாவில் ஆக்டிவாக செயல்படுறீர்கள், அதே அக்கறையோடு அதனை சோஷியல் மீடியாவில், பேஸ் புக்கில், ட்விட்டரில் பதிவு செய்யுங்கள், துணைவேந்தர்களை அழைத்து, முன்னால் அமர வைத்துக் கொண்டு அவர்களுக்கு சம்பந்தமில்லாத வேறு விஷயங்களைப் பேசியது தவறு.

இரண்டாவது விஷயம் கல்ச்சரைப் பற்றிய ஒன்று, மாநிலங்கள் பிரிக்கப்படுவது குறித்து ஆளுநர் கூறியது நிஜம்தான். நிர்வாக வசதிக்காக மாநிலங்கள் பிரிக்கப்படலாம். அப்படி பிரிக்கப்பட்டுவிட்டால் அந்த மாநிலத்திற்கான தனித்துவமான கலாச்சாரம் கிடையாது என்று ஒரு அபத்தமான கருத்தைச் சொல்கிறார். அவர் எந்த மாநிலம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை, அப்படியென்றால் அவர் தமிழ்நாட்டைச் சேர்த்துதான் சொல்கிறார், அதனை நான் ஒரு இன்பர்மேசனா எடுத்துக்றேன். தமிழ்நாட்டிற்கென்று கலாச்சாரம் இல்லையா? அவர் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும் போதே இவருக்கு மேல் இருக்கின்ற, இவருடைய நியமன உத்தரவில் கையெழுத்திடுகின்ற ஜனாதிபதி ட்விட்டர் வெளியிடுகிறார், ‘தெலுங்கானா மாநிலம் பிறப்பான தினம் ஜூன் 2, கலாச்சாரத் தொன்மை வாய்ந்த தெலுங்கானா மக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்’ என்று. அவர் தனது ஆதர்ச புருஷராக நினைக்கின்ற மோடி , அதே நாளில் ஒரு ட்விட்டர் வெளியிடுகிறார். ‘கலாச்சார செழுமை வாய்ந்த தெலுங்கானா மக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்’ என்று. அப்போ கலாச்சாரம் அங்கே இருக்கா இல்லையா?

ஜனாதிபதிக்குத் தெரியாத விஷயம், பிரதமருக்குத் தெரியாத விஷயம் அல்லது அவர்களை விட தனக்கு அதிகமாக தெரியும் என்று நினைத்துக் கொண்டு சேட்டை செய்ததினால் தான் ஒரு முதலமைச்சர் என்பதையும் மறந்து, அது அரசியல் மேடை தான் என்றாலும் கூட , ஆளுநருக்கு விடுக்கப்பட்ட அறைகூவல் என்றுதான் நான் நினைக்கிறேன். கடைசியாக ஒரு சேட்டை செய்தார், மாநில அரசு பல்வேறு விஷயங்களில் விருதுகளை அளிக்கிறது. விருதுகளை அறிவிக்கிறது. அதற்கு தேர்வுக் கமிட்டியும் இருக்கிறது.

கவர்னர் புது முயற்சியாக, முதன் முறையாக சமூகச் சேவைகள் தனி நபர்களுக்கு. நிறுவனங்களுக்கு நான் ஒரு விருது அறிவிக்கிறேன். அது ஒரு பொதுவான பெயரில் இருந்தால்கூட பரவாயில்லை , கவர்னர் விருது என்கின்ற பெயரில் அறிவித்து, அதற்கு விண்ணப்பங் களை வரவேற்கிறார். இது சேஷ்டைகளின் உச்சம். இப்படி ஒரு இணையான அரசை நடத்த நினைக்கின்ற ஆளுநருக்கு முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எச்சரிக்கைதான் இது.

### முரசொலியில் எழுதியது ஒட்டுமொத்த தமிழருடைய குரல்!

**நெறியாளர்:** அங்கீகாரம் அளிக்கிறது என்பதில் நீங்கள் ஏன் அவ்வளவு கடுமையான வார்த்தையை பிரயோகிக்கிறீர்கள்? அதனை நீங்கள் ஏன் அப்படி பார்க்க வேண்டி இருக்கிறது?

**எஸ்.பி. லட்சுமணன்:** ஆளுநரின் வேலை அதுவல்ல, அவருக்கு அவ்வளவு நிர்வாக ஆசை இருந்தால், இன்றைக்கு முரசொலியில் எழுதி இருக்கிறார்கள். ஒவ்வொரு தமிழருடைய குரலும் அதுவாகத்தான் இருக்கணும். ஆளுநருக்கு இவ்வளவு ஆசை இருந்தால் அந்தப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தென் சென்னையில் தமிழச்சியை எதிர்த்துப் போட்டியிடட்டும். இல்லை என்றால் சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சராக ஆக வேண்டும் என்று நினைத்தால் அதே வேளச்சேரியில் ஒரு வீட்டை எடுத்து வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறட்டும்.

**நெறியாளர்:** இப்போது நிதீஷ்குமார் ஒரு முயற்சி எடுக்கிறார். எந்தவிதமான சிக்னலும் இல்லாத மம்தா பானர்ஜியும் இன்றைக்கு வந்து கூட்டணிக்குத் தயார் என்று சொல்கிறார். ஆம் ஆத்மி உள்ளிட்டவர்களும் கூட பொதுமேடைகளில் ஒன்றாக சேரக் கூடியதை பார்க்கின்றோம். அப்படி என்றால் இவை எந்த திசை நோக்கி போகும் என்று நீங்கள் கணிக்கிறீர்கள்?

**எஸ்.பி.லட்சுமணன்:** பி.ஜே.பி.க்கு எதிராக தேசிய அளவில் ஒரு அணியை கட்டமைக்கும் முயற்சி. கடந்த 15 நாட்களாக, இன்னும் சொல்லப்போனால் கடந்த ஒரு மாதத்தில் பலப்பல குழப்பங்கள், பலப்பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறது. நீங்க சொன்ன மாதிரி காங்கிரஸ் பி.ஜே.பி.யோடு கூட்டணி வைத்து என்னை வீழ்த்துகிறது, வீழ்த்தி விட்டது என்று விமர்சித்த மம்தா, கொஞ்சம் மனசு மாறி, கர்நாடகாவில் காங்கிரஸ் பெற்ற வெற்றிக்குப் பிறகு வலுவாக உள்ள மாநில கட்சிகள் இருக்கின்ற இடங்களில் காங்கிரஸ் கட்சி எங்களை ஆதரிக்கட்டும், காங்கிரஸ் இல்லாத இடங்களில் நாங்கள் எங்கள் ஆதரவை தருகிறோம் என்று சொல்கின்ற அளவிற்கு காங்கிரஸை ஆதரிக்கின்ற மனநிலைக்கு மம்தா வந்திருக்கிறார்கள். இது ஒரு முன்னேற்றமான விஷயம், பி.ஜே.பி.க்கு எதிரான அணியை கட்டமைப்பதில்,

‘மதச்சார்பற்ற அணி’ என்ற வார்த்தையை தன் கட்சியின் பெயரிலே வைத்துக் கொண்டு இருக்கின்ற தேவகவுடாவின் கடந்த 15 நாட்கள் நடவடிக்கைகளைப் பார்த்தால் தலையே சுற்றும். அந்தப் பெயரை வைத்துக் கொண்டு மதவாத சக்தி என்று விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கக் கூடிய பி.ஜே.பி.யுடனான நட்பு பாராட்டுகிற சில காரியங்களை அவர் செய்கின்றார். ஒட்டுமொத்த கட்சிகளும் நாடாளுமன்ற புதிய கட்டிடத்தை திறப்பு விழாவை புறக்கணிக்கின்ற போது, அந்த விழாவில் தேவகவுடா கலந்து கொண்டார்.

நிதிஷ் குமார் கூட்டத்தில் அவர் கலந்து கொள்வாரோ, மாட்டாரோ என்கிற சந்தேகம் இருக்கின்ற போது சில தர்ம சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக நிதிஷ்க்குப் பதிலாக பரூக் அப்துல்லாவை சந்தித்துப் பேசுகிறார், இந்த நிமிடங்களில் கூட அவர் பிடி கொடுக்க மறுக்கிறார். ஏற்கனவே ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி, பி.ஜே.பி.யின் பக்கம்தான் சாய்கின்ற மாதிரி இருக்கிறார். அதற்கு அவருக்கு சுயநலமான சில பிரச்சினை களும் காரணமாக இருக்கிறது. ஜெகனுடைய நேர் எதிரியான சந்திரபாபு நாயுடும் அமித்ஷாவை பார்க்கிறார், பி.ஜே.பி.யுடன் சேர்கிற முயற்சியில் அவர் இருக்கின்ற போது தான் நேற்று முதலமைச்சர் ஸ்டாலின் ஒரு மெச்சூரிட்டியான வார்த்தைகளை அதில் பயன்படுத்தி இருக்கிறார்.

“எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும், எதற்கும் இடம் அளித்து விடாதீர்கள்” என்று போகிற போக்கில் சொல்லாமல், அகில இந்திய தலைவர்கள் தொடங்கி, மாநிலத் தலைவர்கள், முதலமைச்சர்கள் வரை இதற்கு இரையாகி விடாதீர்கள், அப்படி அந்தப் பதவிகளை குறிப்பிட்டுச் சொன்னது, மம்தா பானர்ஜி தொடங்கி தேவகவுடா வரைக்கும் தான் என்று நான் பார்க்கிறேன்.

இங்கே மதுக்கூர் இராமலிங்கம் கூறியதுமாதிரி தேசிய அளவில் ஒரு அணியைக் கட்டமைக்கும் போது பலப்பலப் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். வராமல் இருக்காது. ஆனால், ‘ஒரு அணியைக் கட்டமைக்க எங்களால் முடியும்’ என்கிற ஒரு முயற்சியோடு, வருகிற 23 ஆம் தேதி ஒரு கூட்டம் நடக்க இருக்கிறதே அது, ஒரு நம்பிக்கையை, ஒரு உற்சாகத்தை அந்தந்த கட்சித் தொண்டர்களுக்கு தரும், அதில் சில தர்க்கங்கள் வரலாம், எதிர்பாராத முன்னேற்றம் கூட வரலாம், இன்னும் பத்து மாத காலம் இருக்கும் போது இப்போதே ஒரு முடிவான முடிவுக்கு வருவது கடினம்.

**நெறியாளர்:** இந்தக் கட்சி கள் ஒன்றாக உட்கார்ந்து பேச முற்படுவதே ஒரு பாஸிட்டிவ் என்று சொல்கிறீர்களா?

**எஸ்.பி.லட்சுமணன்:** அப்படி பேச முற்படுவது உண்மையிலே தொண்டர்களுக்கு உற்சாகம் தருகின்ற விஷயம். இப்படி ஒரு கூட்டம் நடத்த வேண்டும். அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது முதலில். அப்படி நடக்கின்ற கூட்டத்தில் தனக்குப் பதிலாக, தனது இரண்டாம் கட்டத் தலைவர்களை அனுப்பலாம் என்று சில கட்சிகள் நினைக்கிற போது தான், நித்திஷ் குமார் அதனை நேற்று போட்டு உடைத்தார். “நீங்கள் இரண்டாம் கட்டத் தலைவர்களை அனுப்பாதீர்கள்; யார் தலைவரோ அவரே வாங்கள்” என்று கூறினார். கட்சித்தலைவர் பொறுப்பில் இல்லாத ராகுல் வரவேண்டும் என்று சொல்கிறார். ஏன் என்றால் இந்த அணி அர்த்தமுள்ள அணியாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

**நெறியாளர்:** இந்த நேரத்தில்தான் முதலமைச்சர் இன்னொரு கருத்தையும் சொல்கிறார் . யார் ஆட்சிப் பொறுப்புக்கு வர வேண்டும் என்பதை விட யார் வரக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒரு கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதை விட, ஆட்சிக்கு யார் வரக்கூடாது என்பதைத் தடுப்பதற்கு ஒரு கூட்டணி அமைப்பது எளிதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**எஸ்.பி. லட்சுமணன்:** நிச்சயமாக, எதார்த்தமான கருத்து, ராகுலை பிடிக்காதவர்கள் கூட அந்த அணியைப் புறக்கணிக்க முடியாது என்கின்ற சூழலுக்கு ஸ்டாலின் மற்ற கட்சிகளைத் தள்ளியதாக நாம் பார்க்கலாம்.

2019 இல் ஸ்டாலின் , இராகுலை மற்றவர்கள் ஏற்பார்களா, ஏற்க மாட்டார்களா என்று ஒரு சிறிய விவாதம் கூட நடத்தாமல் ஒரு பூரிப்போடும், பெருமையோடும் அறிவாலய வாசலில் வைத்து ராகுல் தான் பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்தார். ஆனால் இப்போது காங்கிரசை உள்ளடக்கிய ஒரு அணிதான் மாற்று அணியாக இருக்க முடியும். காங்கிரசைத் தவிர்த்த எந்த அணியும் பி.ஜே.பி. யின் வெற்றிக்குத்தான் உதவும் என்கின்ற கருத்தை கடந்த பல மாதங்களாக ஸ்டாலின் அழுத்தம் திருத்தமாக சொல்லி வருகிறார். அதனுடைய தொடர்ச்சியாகத்தான் நேற்றைய மேடையில் பலப்பல கருத்துக்களை சொல்லியிருக்கிறார்.

### வருகிற நாடாளுமன்றத் தேர்தல் கர்நாடக மாநிலத் தேர்தலின் முன்னோட்டமானதுதான்!

கர்நாடகத்தில் நடந்த தேர்தல் வெறும் மாநிலத் தேர்தல் மட்டுமல்ல, இதனை நான் சொல்லவில்லை, பிரதமர் மோடியே கர்நாடகாவில் மேடைகள்தோறும் கூறினார். அப்போது அவர் ‘இரட்டை என்ஜின் சர்க்கார்’ என்று பேசியிருக்கிறார். ஒரு என்ஜின் கர்நாடக மாநிலத்திற்கானது, இன்னொரு என்ஜின் மத்திய சர்க்காருக்கானது , இந்த இரட்டை என்ஜினுக்கு வாக்களியுங்கள் என்று அவர் கேட்டபோதே , பாதி மத்திய சர்க்காருக்கு வாக்களியுங்கள் என்ற வார்த்தையைத்தான் அவர் பயன்படுத்தினார். அப்படிக் கேட்ட மோடியை கர்நாடக மக்கள் புறக்கணித்த போதே அது தேசியத் தேர்தல், அதற்கான முன்னோட்டமாகவும் கர்நாடகத் தேர்தலை எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் நான் சொல்கிறேன். இந்தத் தேர்தலில் தேசிய பார்வை இருந்தது என்று இந்த விளக்கத்தைச் சொல்கிறேன். இதனை யாரோ சொல்லவில்லை பிரதமர் மோடியே கூறினார்.

நதி நீர் பிரச்சினையை மையமாக வைத்து தி.மு.க.கூட்டணிக்கு சில சங்கடங்கள் இருக்கிறது என்றால் அதே சங்கடம் பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணிக்கும் இருக்கிறது. கர்நாடகாவில் பி.ஜே.பி.யினுடைய மேகதாது அணை விஷயத்தில் நிலை என்னவென்று கேளுங்கள். இதனை அவர்கள் எதிர்ப்பதாகவே வைத்துக் கொள்வோம். மேகதாதுவின் விரிவான திட்ட அறிக்கை எங்களிடம் வந்தால், அதற்கு நாங்கள் அனுமதி மறுப்போம், சுற்றுச் சூழல் அனுமதி தர மாட்டோம் என்று ஒன்றிய அரசு சொல்லுமா? அப்படி சொல்லத் தவறினால் அந்த பி.ஜே.பி.யை நோக்கி உங்களுடைய கூட்டணி பார்வை என்ன? என்று அ.தி.மு.க.வை கேட்டால், அவர்களுக்கும் சங்கடம் வரும். இதனைத் தவிர்த்துவிட்டு மதுக்கூர் சொன்னமாதிரி நதிநீர் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் தமிழ்நாடு என்கின்ற குடையின் கீழ் இருந்துதான் எல்லா கட்சிகளும் போரிடணும்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் எஸ்.பி.லட்சுமணன் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிங்கார இரத்தினசபாபதி

**ஜூன் 11 (2020)**



தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.

கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்தோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**